வழங்கப்படும் சேவைகள்

நாங்கள் பின்வரும் வழிகளில் ஆதரவையும் தகவல்களையும் வழங்குகிறோம்:

- **வீட்டு வருகை ஆதரவு**. சங்கத்தின் கலந்தாய்வு வீட்டு வருகைக் குழுக்கள் மற்றும் பிற வின்னீஸ் (Vinnies) சேவைகளுடன் மக்களை இணைத்தல்.
- **உங்கள் நலன்களுக்காகப் பரிந்துரைத்தல்.**
- **ஆதரவுக் கடிதங்கள் மற்றும்** தொடர்புடைய சேவைகளுக்கான **பரிந்துரைகள்**.
- **வீட்டுவசதி விண்ணப்ப ஆதரவு**. இணையவழி மற்றும் தொலைபேசி விண்ணப்பங்கள், படிவங்களை நிரப்புதல் மற்றும் ஆவணங்களை அலகீடு (scan) செய்தல் போன்றவற்றில் உதவி.
- **பரிசு அட்டைகள்**. வின்னீஸ் கடைகள் மற்றும் உள்ளூர் பல்பொருள் அங்காடிகளுக்கான பரிசு அட்டைகளைப் பெறுவதற்கான வசதி.
- **இணையவழி படிவங்களை அனுகுவதற்கான உதவி**. அச்சுப் பிரதியிலுள்ள ஆவணங்களை அலகீடு (scan) செய்து மின்னஞ்சலில் அனுப்புதல், விண்ணப்பங்களை மின்னணு முறையில் சமர்ப்பிக்க உதவுதல்.
- **கட்டண உதவி**.
- **எரிசக்திக் கணக்குகள் கட்டணம் செலுத்துவதற்கான உதவி** (EAPA). *விண்ணப்பங்களுக்கான ஆதரவு.
- **உணவுப் பொட்டலங்கள் மற்றும் சமையலறை அத்தியாவசிய உணவுப் பொருட்கள்.**
- **வட்டியில்லாக் கடன் திட்டம் (NILS)**. அத்தியாவசியத் தேவைகளை ஈடுசெய்ய சிறு கடன்களுக்கு விண்ணப்பிக்க உதவி.
- **பிற நேரடி ஆதரவுகள்**.* நுண்ணலை மின் அடுப்பு (microwave) உணவுகள், தேநீர் மற்றும் காபி, தொலைபேசி/சாதனங்களை சார்ஜ் செய்தல் போன்றவற்றுக்கான வசதி.
- **நிதி ஆலோசனை**.*

எங்கள் சேவைகளைப் பெறுவது குறித்த மேலதிகத் தகவல்களுக்கு உங்கள் உள்ளூர் VSC ஐத் தொடர்பு கொள்ளவும். *பட்டியலிடப்பட்டுள்ள சேவைகள் அனைத்தும் எல்லா இடங்களிலும் வழங்கப்படுவதில்லை என்பதை நினைவில் கொள்ளவும்.

சேவையைப் பெறுதல்

தொடங்குவது மிகவும் எளிது. உங்கள் தேவைகளைப் புரிந்துகொள்ள, நாங்கள் உங்களுடன் ஒரு நட்பான, இரகசியமான உரையாடலை மேற்கொள்வோம். சரியான ஆதரவை வழங்க, நாங்கள் ஆவணங்களை வேண்டி ஒரு மதிப்பீட்டை மேற்கொள்ளலாம்.

நீங்கள் ஆங்கிலம் அல்லாத வேறு மொழியைப் பயன்படுத்த விரும்பினால், மொழிபெயர்த்தல் மற்றும் மொழிபெயர்த்துரைத்தல் சேவைக்கு (TIS National) 131 450 என்ற எண்ணில் தொலைபேசியில் அழைக்கவும்.

தேசியத் தொடர் அஞ்சல் சேவை மூலம் எங்களைத் தொடர்பு கொள்ள: 1800 555 677

மற்ற பயனுள்ள தொடர்புகள்

Link2Home: 1800 152 152

Vinnies Assist: 13 18 12

வின்னீஸ் ஆதரவு மையங்கள் பற்றிய கூடுதல் தகவல்களுக்கு QRஐ அலகீடு (scan) செய்யவும் அல்லது **vinnies.org.au/nsw/find-help/vinnies-support-centres** என்ற இணையதளத்துக்குச் செல்லவும்.

குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய பெரியவர்கள் தங்கள் குடும்பங்களிலும் சமூகங்களிலும் வளமுற வாழ்வதற்கு அவர்களைப் பாதுகாப்பது என்பது சிரமங்களை எதிர்கொள்பவர்களுக்கு உதவும் எங்கள் பணியின் அடிப்படை அம்சமாகும். குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய பெரியவர்கள் தங்கள் குடும்பங்களிலும் சமூகங்களிலும் வளமுற வாழ்வதை உறுதி செய்வதற்காக, அவர்களுக்கு எதிரான அனைத்து வகையான துஷ்பிரயோகங்களையும் தடுக்க இந்தச் சங்கம் பரந்த சமூகத்துடன் இணைந்து செயல்பட முயல்கிறது. இதன் மூலம் அவர்களின் இயல்பான கண்ணியம், பராமரிப்பு மற்றும் நல்வாழ்வு பேணப்படுவதை உறுதி செய்கிறது.

செயின்ட் வின்சென்ட் டி பால் சங்கம் – நியூ சவுத் வேல்ஸ் (St Vincent de Paul Society NSW), நாங்கள் செயல்படும் நிலத்தின் பாரம்பரியப் பாதுகாவலர்களை ஆழ்ந்த மரியாதையுடன் அங்கீகரிக்கிறது. வின்னீஸ் ஆதரவு மையங்கள் – நியூ சவுத் வேல்ஸ் (Vinnies Support Centres NSW), சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் ஒரு உள்ளடக்கிய மற்றும் பாதுகாப்பான இடமாகும்.

St Vincent de Paul Society NSW
good works

Tamil



வின்னீஸ் ஆதரவு மையங்கள் (VINNIES SUPPORT CENTRES)

நிதி உதவி, உணவு, அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் பலவற்றில் உங்களுக்கு உதவுகிறோம்

St Vincent de Paul Society NSW
good works



சேவையைப் பற்றி

வின்னீஸ் ஆதரவு மையங்கள், செயின்ட் வின்சென்ட் டி பால் சொசைட்டி – நியூ சவுத் வேல்ஸால் இயக்கப்படும் அன்பான மற்றும் வரவேற்கும் இடங்களாகும். சமூகத்தில் சிரமங்களை எதிர்கொள்ளும் தனிநபர்களுக்கும், குடும்பங்களுக்கும் நாங்கள் நேருக்கு நேர் ஆதரவு, பரிந்துரைகள் மற்றும் பல்வேறு உதவிகளை வழங்குகிறோம். உங்களுக்கு நிதி உதவி, உணவு, அத்தியாவசியப் பொருட்கள், சேவைகளைப் பெறுவதற்கான உதவி அல்லது வெறுமனே பேசுவதற்கு யாராவது தேவைப்பட்டாலும், நாங்கள் நடைமுறை உதவியை வழங்குகிறோம். உங்கள் நிலைத்தன்மை மற்றும் நல்வாழ்வுக்கான பாதையில் உங்களுக்கு ஆதரவளிக்க நாங்கள் இருக்கிறோம். எங்கள் அர்ப்பணிப்புள்ள ஆதரவுக் குழுக்கள், உங்கள் சூழ்நிலைக்கு ஏற்ற மிகச்சிறந்த ஆதரவைக் கண்டறிய உங்களுடன் இணைந்து செயல்படுகின்றன.



"முழு உலகையும் அன்பின் வலையமைப்பில் அரவணைத்துக் கொள்ளுங்கள்."

ஃபிரடெரிக் ஓசானம் (Frederic Ozanam)
நிறுவனர், புனித வின்சென்ட் டி பால் சங்கம்
(The Society of St Vincent de Paul)

நீங்கள் எப்போது வருகை தரலாம்

திங்கள் முதல் வெள்ளி வரை திறந்திருக்கும்

காலை 9.30 – மாலை 3.30

சந்திப்பு ஏற்பாட்டுக்கு முன்பதிவு செய்ய காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை உங்கள் உள்ளூர் VSC மையத்தைத் தொலைபேசியில் அழைக்கவும்.

முன்பதிவு இல்லாமல் வருபவர்களும் வரவேற்கப்படுகிறார்கள்.

மதிய உணவு இடைவேளை நேரங்கள் மாறுபடும் என்பதாலும், சில மையங்கள் ஒவ்வொரு நாளும் முன்பதிவு இல்லாமல் வருபவர்களுக்காகத் திறந்திருக்காது என்பதாலும், வருகை நேரம் உள்ளதா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள தயவுசெய்து முன்கூட்டியே அழைக்கவும்.

இடங்கள்

சக்கர நாற்காலி சின்னம் குறிக்கப்பட்ட மையங்களில் சக்கர நாற்காலி மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான அணுகல் வசதி உள்ளது. அணுகல் தேவைகளை உறுதிப்படுத்த உங்கள் உள்ளூர் VSCஐத் தொடர்பு கொள்ளவும்.

AUBURN
Suite 7/1 Kerr Parade தொலைபேசி: 9643 7794
AuburnVSC@vinnies.org.au

BANKSTOWN
2a East Terrace தொலைபேசி: 9796 1176
BankstownVSC@vinnies.org.au

BLACKTOWN
23 David Lane தொலைபேசி: 8861 9777
BlacktownVSC@vinnies.org.au

BROOKVALE
684 Pittwater Road தொலைபேசி: 9905 0424
BrookvaleVSC@vinnies.org.au

BURWOOD
143 Burwood Rd தொலைபேசி: 9173 1200
BurwoodVSC@vinnies.org.au

CHATSWOOD
287 Victoria Avenue தொலைபேசி: 9419 3599
ChatswoodVSC@vinnies.org.au

CROWS NEST
60 Alexander St தொலைபேசி: 7203 3407
CrowsNestVSC@vinnies.org.au

EMERTON
254 Luxford Rd தொலைபேசி: 8861 9770
Parramatta.emerton@vinnies.org.au

GOSFORD
273–275 Mann Street தொலைபேசி: 4322 5861
GosfordVSC@vinnies.org.au

HARRIS PARK
72 Harris St தொலைபேசி: 8861 9757
HarrisparkVSC@vinnies.org.au

HORNSBY
41 Jersey Street தொலைபேசி: 9477 5022
HornsbyVSC@vinnies.org.au

HURSTVILLE
183C Forest Rd தொலைபேசி: 9580 2459
Hurstville.VSC@vinnies.org.au

KATOOMBA
37 Pioneer Place தொலைபேசி: 8861 9770
PenrithVSC@vinnies.org.au

MOUNT PRITCHARD
248 Humphries Rd தொலைபேசி: 9823 1222
MountpritchardVSC@vinnies.org.au

PENRITH
Suite 7/308 High St தொலைபேசி: 8861 9770
PenrithVSC@vinnies.org.au

REDFERN
317 Cleveland St தொலைபேசி: 9690 5600
RedfernVSC@vinnies.org.au

SUTHERLAND
L1/710 Old Princes Hwy தொலைபேசி: 9542 4924
SutherlandVSC@vinnies.org.au

WEST RYDE
51 Ryedale Rd தொலைபேசி: 9809 2757
WestrydeVSC@vinnies.org.au

WOY WOY
41-43 The Boulevard தொலைபேசி: 4341 7535
WoywoyVSC@vinnies.org.au

WYONG
47 Howarth St தொலைபேசி: 4353 5614
WyongVSC@vinnies.org.au